தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலகுவழி மாதிரிப் பரீட்சை - 05

ஆசிரியர் : P.அம்பிகைபாகன்
இடம் : ACA, ஆசிரியரின் வீட்டில் குழு வகுப்புக்களில்

1 தொடக்கம் 3 வரையிலான வினாக்களுக்கு வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அடைப்புகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

குமாரனின் கடைக்கு நல்ல புகழ் ; திறமான பொருட்களை 1. ..... (பணம், கூலி, சம்பளம்) கொடுத்து வாங்க வசதி படைத்த 2. ..... (பிச்சைக்காரர்கள் , பாவனையாளர்கள், நாடோடிகள்) பலர் அவனிடமே வருவது வழக்கமாகி விட்டது. அதனால் அயற்கடைக்காரர்களுக்கு குமாரன் மேல் ஓரளவுக்கு 3. ..... (அன்பு, ஆத்திரம், பொறாமை) உண்டாகியது.

" **உடமையும் கடமையும்**" எனும் பாடலின் படிமுறைகள் சரியான ஒழுங்கில் இடம் பெறும் விடையைத் தெரிவு செய்க.

A - இனிய பழத்தின் இன்சுவையாய் - நீ
B - ஓம்புதல் தானே உன் உடைமை
C - இயம்புதல் என்றும் உன் கடமை
D - ஒழுக்கம் உயர்வு தந்திடுமே - அதை

4. 1. D,C,A,B 2. A,C,B,D 3. D,B,A,C

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் உள்ள நான்கு சொற்களுள் மூன்று சொற்கள் ஏதோவொரு விதத்தில் ஒத்துள்ளன. அவற்றுள் வித்தியாசமான ஒரு சொல்லின் கீழ்க் கீறிடுக.

5. 1. கடிதம் 2. முத்திரை 3. வெளிநாடு 4. தபாற்கந்தோர்

6. 1. துறப்பணம் 2. உளி 3. மண்வெட்டி 4. சீவுளி

7. 1. எலி 2. பாம்பு 3. நத்தை 4. அட்டை


8 தொடக்கம் 10 வரையிலான வினாக்களுக்கு சொற்றொடர் குறித்து நிற்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.

8. போர் வீரர் அணியும் இரும்புச் சட்டை
   1. சீருடை 2. பட்டி 3. உறை 4. கவசம்


9. இந்துமதப் பெண்கள் நெற்றியில் வைக்கும் பொட்டு
   1. ஒட்டுப்பொட்டு 2. கும்குமப்பொட்டு 3. திலகம் 4. சந்தனப்பொட்டு

10. இந்துமத ஆண்கள் காதுகளில் அணியும் காதணி
    1. தோடு 2. கடுக்கண் 3. ஜிப்சி 4. ஒட்டுத்தோடு


கீழேயுள்ள அட்டைக்கீலங்களை மடித்து ஒட்டுவதன் மூலம் கிடைக்கும் உருவத்தின் பெயரைத் தெரிவு செய்க.

11. 

1. சதுரமுகி 2. கூம்பு 3. அரியம் 4. கூம்பகம்

12. 

1. சதுரமுகி 2. கூம்பு 3. அரியம் 4. கூம்பகம்

13. 

1. சதுரமுகி 2. கூம்பு 3. அரியம் 4. கூம்பகம்

பந்தியை வாசித்து விளங்கி வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

உலகிற்கு உணவு அளிக்கும் விவசாயியின் வீடோ ஓலைக்குடிசை. கணவன், மனைவி இருவரும் பிள்ளைகளின் வயிற்றுப் பசிக்காக வேலை செய்கின்றார்கள். அந்தி சாயும் வேளை கமகம என மணக்கும் கூழ் தயாரிக்கிறாள் இல்லத்தரசி. குடிசை வாயிலில் முழுமதி நிலவில் எல்லோரும் கூழ் குடிக்கிறார்கள். விவசாயி குடும்பம் பகல் முழுவதும் பாடுபட்ட உடம்பின் களை தீர நிம்மதியாக நித்திரைக்குச் செல்கின்றனர். இதுவே விவசாயியின் வாழ்க்கை ஆகும்.


14. யாருடைய வாழ்க்கை பற்றி இப்பந்தியில் விபரிக்கப்படுகின்றது?
(ஏழையின் வாழ்வு பற்றி, தொழிலாளியின் வாழ்வு பற்றி, கமக்காரனின் வாழ்வு பற்றி)

15. ஓலைக்குடிசை எதனால் வேயப்பட்டிருக்கும்?
(ஓட்டினால், தகரத்தகடுகளால், கிடுகினால்)

16. பந்தியில் வரும் இரட்டைக்கிளவிச் சொல் எது?
(வயிற்றுப்பசி, கமகம, மணக்கும் கூழ்)

17. இல்லத்தரசி எனும் சொல்லுக்கு ஒத்ததாக பந்தியில் வரும் வேறொரு சொல் எது?
(இல்லாள், கணவன், மனைவி)

18. நகர்புற கடைத்தெருவில் காணப்படும் இவ்வீதிச் சமிக்கையின் கருத்து யாது?



1. இவ்விடத்தில் வாகனம் நிறுத்தலாம்.
2. இவ்விடத்தில் வாகனம் நிறுத்தக்கூடாது
3. இவ்விடம் பஸ் தரிப்பு இடமாகும்.

இலங்கையின் தேசியக்கொடி ஏற்றுவது சம்பந்தமான சரியான தகவலுக்கு எதிரே 'சரி' எனவும் பிழையான (தவறான) தகவலுக்கு எதிரே 'பிழை' எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

19. தேசியக் கொடியை காலையில் சூரியன் உதித்த பின் ஏற்றி மாலையில் சூரியன் மறைவதற்குமுன் இறக்க வேண்டும்

(.....)

20. பழுதடைந்த, கிழிந்த தேசியக் கொடியை சூரியஒளி படும் இடங்களில் ஏற்ற வேண்டும்

(.....)

21. தேசியக் கொடி ஏற்றும் போது இலகுவாய் நிற்றல் வேண்டும். (.....)

22. தேசிய பிரமுகர்களுக்கு முன் தேசியக் கொடியை தாழ்த்திப் பிடிக்கக் கூடாது.

(.....)

23. ஊர்வலங்களின் போது தேசியக் கொடி நிலத்தில் படாதவண்ணம் தூக்கிச் செல்ல வேண்டும்.

(.....)


24. தேசியக் கொடி தூக்கிச் செல்பவர் அக்கூட்டத்திலுள்ளவர்களில் மிகவும் வயது கூடிய முதியவராக இருக்க வேண்டும்.

(.....)


25. தேசியக் கொடிக்கு மதிப்பளிப்பது இந்நாட்டு சகல மக்களினதும் கடமை ஆகும்.

(.....)

26. வினாவின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை B குறிப்பிடும் திசை வழியே பார்க்கும் போது அது தோன்றும் விதத்தைக் காட்டும் விடையின் கீழ்க் கீறிடுக.



27. அவ்வுருவை A குறிப்பிடும் திசை வழியே பார்க்கும் போது அது தோன்றும் விதம்.



சரியான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

28. எட்டுப்பேர் 4 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை இருவர் எத்தனை நாட்களில் செய்வார்கள்?

(.....)

29. காலை 8:00 மணிக்கு பயணத்தை ஆரம்பித்த ஒருவர் அன்றைய தினம் மாலை 3:00 மணிக்கு பயணத்தை முடித்துக் கொண்டார். அவர் பயணத்தில் செலவிட்ட மணித்தியாலங்கள் எத்தனை?

(.....)

30. ரூபா 286.45ஐக் குறியீடுகளில் JEC.LK எனக் காட்டலாமாயின் ரூபா 685.45 ஐ எவ்வாறு குறியீடுகள் மூலம் காட்டலாம்?

(.....)

பனை, தாமரை, மல்லிகை
நாகதாளி, வேம்பு, ஐதரில்லா
முல்லை, குருவிச்சை, தென்னை

பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து வினாவுக்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

31. நீரினுள் பூரணமாக மூழ்கியிருந்து வளரும் தாவரம் எது? (.....)

32. இலைகள் இல்லாது முட்கள் மட்டும் கொண்ட தாவரம் எது? (.....)

33. தண்டு, வேர், நீரினுள் அமிழ்ந்து பூ மட்டும் வெளியே பூக்கும் தாவரம் எது? (.....)

34. முத்திரை ஒட்டுவதற்கு பயன்படும் பிசின் பெறக்கூடிய தாவரம் எது? (.....)

நேற்று மாலை பூந்தோட்டத்தில் நீர் ஊற்றிக் கொண்டு இருந்தேன். அவ்வேளை ஒரு அழகிய கிளி தோட்டத்து மாமரத்தில் வந்து இருந்தது. அதன் அழகு என்னைப் பெரிதும் கவர்ந்தது. அது எவ்வளவு ஆனந்தமாக இருக்கின்றது? இதைப் போன்று நானும் ஒரு பறவை யானால்.....

இதனைத் தொடர்ந்து உமது மனதில் தோன்றும் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய் பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்.)


35. .....

36. .....

37. .....


38. பின்வரும் உருக்களின் சுற்றளவைக் காணுங்கள்

1.




.....

2.



.....


3.



.....


39. பின்வரும் உருக்களின் பரப்பளவைக் காணுங்கள்.

1.




.....

2.




.....


3.





.....

40. இக் கோலத்திற்கேற்ப அடுத்ததாக இடப்பட வேண்டிய உருவைத் தெரிவு செய்க.











1



2



3